# இலங்கை வங்கி

**தீவளாவிய வலுவான கிளை வலையமைப்பையும் இலண்டனில் உள்ள துணை நிறுவனம் உட்பட பரந்தகன்ற வெளிநாட்டு வங்கி வலையமைப்பையும் கொண்டுள்ளதும் உலகளாவிய அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகவும் இலங்கையின் 1ஆம் தரவங்கியாகவும் தரப்படுத்தப் பட்டுள்ளதுமான இலங்கை வங்கி பின்வரும் பதவிக்குப் பொருத்தமான தகைமைகளும் அனுபவமும் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.**

## பயிலுநர் அபிவிருத்தி உதவியாளர்

**(மத்திய, கிழக்கு, வட மத்திய, வடமேல், வட, சபரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் மாத்திரமே வெற்றிடங்கள் காணப்படுகின்றன)**

### தகுதிப் பிரமாணங்கள்

1. **இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்**
2. **தகைமைகள்**

அ) க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் தாய் மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழி உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஐந்து (05) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடங்களைத் தவிர்த்து)

**மற்றும்**

ஆ) க.பொ.த (உயர்தர) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் (பொது ஆங்கிலம், பொது அறிவு, மற்றும் பொதுத்தகவல் தொழில்நுட்பம் தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

இ) அரச கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து விவசாய பாடத்தில் ஆகக்குறைந்தது டிப்ளோமா கற்கைநெறியைப் (குறைந்தது இரண்டு ஆண்டுகளைக் கொண்ட முழுநேர) பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் வழங்கப்படும் ஆகக் குறைந்தது இரண்டு ஆண்டுகளைக் கொண்ட முழுநேர விவசாய டிப்ளோமா (NVQ தர 5 அல்லது அதற்கு மேற்பட்ட).

3. **செல்லுபடியான மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உரிமத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.**
4. **ஏனைய திறன்கள்**
   - மற்றவர்களுடன் பழகும், தொடர்பாடும் திறன்களைக் கொண்டிருத்தல்.
   - அர்ப்பணிப்பையும், விடாமுயற்சியினையும் வெளிப்படுத்தும் திறனைக் கொண்டிருத்தல்.
   - நேர வரையறைகளுக்குட் செயற்படும் திறனைக் கொண்டிருத்தல்.
5. **வயது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 28அல்லது அதற்குக் குறைந்த வயதுடையவராக இருத்தல் வேண்டும்.

### விதிகளும் நிபந்தனைகளும்

- பயிற்சிக்காலம் 02 ஆண்டுகள் என்பதோடு அப்பயிற்சிக் காலப்பகுதிக்குரிய மாதாந்தக் கொடுப்பனவாக 1ஆம் வருடம் 60,000 ரூபாயும் 2ஆம் வருடம் 75,000 ரூபாயும் வழங்கப்படும்.
- இப்பதவியானது சாதாரண வங்கிச் சேவைக்கு அப்பாற்பட்டது (மூடிய சேவை) என்பதுடன் வங்கிச் சேவையின் பொதுவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
- விண்ணப்பதாரி பயிற்சிக் காலத்தில் ஆற்றிய சேவையில் வங்கி திருப்தியடையும் பட்சத்தில் அபிவிருத்தி உதவியாளர் - I தரத்தில் நிரந்தர ஆளணியில் உறுதிப்படுத்தப்படுவர்.
- வங்கியின் முகாமைத்துவத்தால் தீர்மானிக்கப்பட்டாலே ஒழிய, பயிலுநர் பணிக்கமர்த்தப்படும் மாகாணத்தில் ஆகக் குறைந்தது பத்து (10) ஆண்டுகள் (பயிற்சிக் காலம் உட்பட) கட்டாயம் பணியாற்ற வேண்டும்.

### தெரிவுசெய்யும் முறை

மேற்படி தகுதி அடிப்படைகளின் கீழ் பட்டியற்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

மேற்குறிப்பிட்ட ஏழு மாகாணங்களின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும்.

### விண்ணப்பிக்கும் முறை

எமது இணையதளமான www.boc.lk (Careers என்ற பகுதியின் கீழ்) ஊடாக **2025 ஜுலை 26ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்** உங்களது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும். சமர்ப்பித்த விண்ணப்பத்தின் 'விண்ணப்பத் தொடர்பு இலக்கத்தை' உங்களது எதிர்காலத் தொடர்புக்காக வைத்திருக்கவும்.

மத்திய, கிழக்கு, வட மத்திய, வடமேல், வட, சபரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் மாத்திரமே வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதோடு விண்ணப்பதாரி ஒரு மாகாணத்தை மாத்திரமே தெரிவுசெய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களைத் தெரிவுசெய்யும் விண்ணப்பதாரி தகுதிநீக்கம் செய்யப்படுவார்.

மேற்குறித்த முறை தவிர வேறு வழிகளில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிவரை பெறுபேறுகள் கிடைக்காத அல்லது தவறான தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். சான்றிதழ் உறுதிப்படுத்தலின்போது மேலே கோரப்பட்ட தகுதி பிரமாணங்களுக்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பங்கள் உடனடியாக நிராகரிக்கப்படும்.

மேற்படி வங்கி இணையதளத்தின் Careers என்ற பகுதியில் காணப்படும் 'விண்ணப்பதாரிக்கான அறிவுறுத்தல்களை' கவனமாக வாசித்து வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய இணையவழி விண்ணப்பத்தை நிரப்பவும்.

விண்ணப்பதாரி பதவிக்கு விண்ணப்பிக்கும்போது வங்கியின் இணையதளத்தின் 'மனிதவள முகாமைத்துவ' பக்கத்தில் (https://www.boc.lk/hr-management) உள்ள 'ஆட்சேர்ப்புக்கான தனிநபர் தரவுப் பாதுகாப்பு அறிவித்தல்' பகுதியை வாசித்து அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**மனிதவளப் பிரிவு**
**இலங்கை வங்கி**
**தலைமை அலுவலகம்**
**கொழும்பு 01**

- தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.
- நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பைப் பிற்போடும் / இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு
- தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க வங்கி உங்களது தகவல்களின் அந்தரங்கத்தையும் இரகசியத்தன்மையையும் பாதுகாக்கிறது.